**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 8 ஆம் நாள் திங்கள்கிழமை**

**I.A.2/2025 O.S. No.39/2023**

பொன்னுச்சாமி .... மனுதாரர்/2–ம் பிரதிவாதி

//எதிர்//

அமராவதி ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது இறுதியாக 03.06.2026 அன்று இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/2–ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.G.மனோஜ்குமார், திரு.எஸ். குமரேசன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனு நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது என மேற்குறிப்பு செய்யப்பட்டும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

அசல் வழக்கில் கடந்த 03.04.2025ம் தேதியன்று மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய மனு தாக்கல் செய்வதில் 04.05.2025ம் தேதி முதல் 19.08.2025ம் தேதி வரை ஏற்பட்ட 107 நாட்கள் காலதாமதத்தை மன்னித்தும், வழக்கினை மேல் நடத்த வேண்டி காலவரையறைச் சட்டம் பிரிவு 5 –ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுவுரை சுருக்கம்</u>

மனுதாரர் அசல் வழக்கில் 2-ம் பிரதிவாதி ஆவார். மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/ வாதி, மனுதாரர் பெயரிலும் மற்றும் பிரதிவாதிகள் பேரிலும் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கு விசாரணைக்காக 24.02.2025-ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் மனுதாரருக்கு திடீரென உடல்நிலை சரியில்லாமல் மஞ்சள் காமாலை ஏற்பட்டு படுத்த படுக்கையாய் இருந்து நாட்டு வைத்தியம் பார்த்து வந்த காரணத்தினால் மனுதாரரால் மனுதாரரது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு விசாரணைக்கு ஆஜராக இயலாமல் போய்விட்டது.

அதன்பின் வழக்கறிஞரை சந்தித்து வழக்கு பற்றிய விபரம் கேட்ட பொழுது தாவா வழக்கு 24.02.2025-ம் தேதி மனுதாரர் ஆஜராகாதக் காரணத்தினால் எக்ஸ்பார்ட்டி ஏற்பட்டு, அதன்பின் வாதி, 1ம் பிரதிவாதி தரப்பில் விசாரணை முடிந்து வழக்கு 03.04.2025-ம் தேதி ஒருதலைபட்சமாக தீர்ப்பான விபரம் தெரிய வந்தது. அதனால் 04.05.2025-ம் தேதி முதல் 19.08.2025-ம் தேதி வரை 107 நாட்கள் காலதாமதத்தை மன்னித்துக்கொண்டு ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) <u>தீர்வு</u>

மனுதாரரின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் மஞ்சள் காமாலை ஏற்பட்டு நாட்டு வைத்தியம் பார்த்து வந்தார் என்று கூறிய காரணத்தை, இம்மனுவை அனுமதிக்க போதுமான காரணம் தான் என்று இந்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, இவ்வழக்கின் இறுதியான தீர்வுக்கு தரப்பினருக்கு போதிய வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை கருத்திற்க்கொண்டு, மனுதாரர்/2-ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தள்ளுபடி உத்தரவை ரத்து செய்ய இத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 107 நாட்கள் காலதாமதத்தை மன்னித்தும், மேற்படி மனுவை கோப்பிற்கு ஏற்றுக்கொண்டும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்பதாலும், தரப்பினருக்கிடையே உள்ள பிரச்சனையை இறுதியாக தீர்வு காண்பதற்கு இம்மனுவை அனுமதிப்பது தான் நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இருப்பினும், மனுவை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால், அதற்குரிய செலவுத்தொகையை மனுதாரர், எதிர்மனுதாரருக்கு அளிக்க வேண்டும் என்று தீர்மானித்து, இம்மனுவின் மனுதாரர் **ரூ.3000/-ஐ** எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக வருகிற **16.06.2026**-ம் தேதிக்குள் செலுத்தவேண்டும். தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும்.

**இறுதியாக, இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜீன் மாதம் 08 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.24 15:27:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நடுவர் ஆத்தூர்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.24 15:27:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நடுவர் ஆத்தூர்.